©
GOVERNMENT OF TAMIL NADU
2011

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 276A]

சென்னை, செவ்வாய்கிழமை, ஆகஸ்ட் 23, 2011
ஆவணி 6, திருவள்ளுவர் ஆண்டு — 2042

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**2011–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 23–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2011**

**2006-ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டத்தை நீக்கம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து இரண்டாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) நீக்க சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 2/2008. 2. 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டம் இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகிறது. நீக்கம்.

**நோக்க–காரண விளக்கவுரை**

2008–ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு (விளம்புகை) சட்டமானது, (தமிழ்நாடு சட்டம் 2/2008) தமிழ்த் திங்களான தைத் திங்கள் முதல் நாளானது தமிழ்ப் புத்தாண்டு நாளாக கொண்டாடப்படுதல் வேண்டும் என விளம்புகின்றது.

பொதுமக்களும், தொல்பொருள் ஆராய்ச்சி அறிஞர்களும், வானியல் வல்லுநர்களும் மற்றும் பல்வேறுபட்ட தமிழ்த் திங்களான சித்திரைத் திங்களின் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடிவரும் வழக்க நடைமுறைக்கு மாறாக உள்ளது என்பதான தமது கருத்துக்களை வெவ்வேறு ஊடகங்களின் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளனர். மேலும் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தை நீக்கம் செய்யுமாறும் தமிழ்த் திங்களான சித்திரைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடும் பழமை வாய்ந்த வழக்காறினை மீட்டளிக்குமாறும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் மேற்சொன்ன சட்டமானது, தமிழ்த் திங்களான தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாகப் பின்பற்றுவதைப் பொறுத்த அளவில், பொதுமக்களிடையே நடைமுறை இடர்பாடுகள், தடை, எதிர்ப்பு ஆகியவற்றை ஏற்படுத்தியுள்ளது. எனவே அரசானது, தமிழ்த் திங்களான சித்திரைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடும் காலத்தால் முற்பட்ட வழக்காறினை மேற்சொன்ன சட்டத்தை நீக்கம் செய்வதன் மூலம் மீட்டளிக்க முடிவு செய்துள்ளது.

**2.** இச்சட்ட முன்வடிவு மேற்காணும் முடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ்.பி. சண்முகநாதன்,**
*இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**அ.மு.பி. ஜமாலுதீன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.